# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 07.04.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 17731/F/2023**

திரு.இரா.பிரவீன் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
(கும்பகோணம்) லிமிட்,
27, புகைவண்டி நிலைய புதுச்சாலை,
கும்பகோணம்-612001. .. பொது அதிகார அமைப்பு

## ஆணை

இவ்வாணையத்தில் இன்று 07.04.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.இரா.பிரவீன் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012, விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுதகவல் அலுவலர் திரு.P.ரவி, துணை மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிட்., கும்பகோணம் அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 15/07/2023 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் அரசு பேருந்தில் ஓட்டுநர் மற்றும் நடத்துனர் நியமனம் செய்யப்படுவதற்கு ஏற்பாடாக அரசின் விதிமுறைகளும் அதன் வழிகாட்டுதலின் நெறிமுறைகள் குறித்த விபரங்கள் போன்ற தகவல்களைக் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் 21.07.2023 நாளிட்ட கடிதத்தின் மூலம் சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் மனுவினை உரிய பொது அதிகார அமைப்பிற்கு மாற்றம் செய்துள்ளார். இந்நிலையில் மனுதாரர் தனக்கு தகவல் கிடைக்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம், பிரிவு 19(1)ன் கீழ் 18.08.2023 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் தகவல் வழங்கவில்லை. பொதுத்தகவல் அலுவலர் 09.09.2023 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். இருப்பினும், சரியான தகவல் வழங்கவில்லை என மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(3)ன் கீழான 06.10.2023 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (07.04.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 07.09.2023 தேதியிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கப்பட்டிருப்பதாக கூறி ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் பொதுத்தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் ஏற்புடையது அல்ல என இவ்வாணையம் கருதி கீழ்காணும் உத்தரவினை பிறப்பிக்கிறது.

**மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள இனங்களுக்கு சரியான முழுமையான தகவல்களை தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 7(6)ன் கீழ் கட்டணம் ஏதுமின்றி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது என்ற முத்திரையுடன் பொதுத்தகவல் அலுவலர் கையொப்பமிட்டு மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி அதனை மனுதாரர் பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் மனுதாரருக்கு வழங்கிய தகவல் ஆகியவற்றை இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் 12.05.2026 அன்று இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 17731/F/2023</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
(கும்பகோணம்) லிமிட்,
27, புகைவண்டி நிலைய புதுச்சாலை,
கும்பகோணம்-612001.

**<u>மேல்முறையீட்டாளர்:-</u>**

திரு.இரா.பிரவீன்,
10/82, வண்டிக்காரத் தெரு,
இரட்டைப்பிள்ளையார் கோவில் சந்து,
மானம்புச்சாவடி,
தஞ்சாவூர்-613001.

Copy to file: KR/PA